# உடன்பிறப்பே... 8

ஓவியம் : ரவிபேலட்

**தி**.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த மாவீரன் கே.வி.கே.சாமி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

## தூத்துக்குடி கே.வி.கே.சாமி:

# தென்னாட்டில் கழகம் வளர்த்த மாவீரன்!



**போ**ராடி வளர்ந்த இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். இந்த இயக்கத்தை வழிநடத்திய தலைவர்கள் உண்டு. நெறிப்படுத்திய தளபதிகள் உண்டு. வளர்த்தெடுத்த தளகர்த்தர்கள் உண்டு. அதேபோல் கொள்கையைத் திடமாகச் செயல்படுத்திய மாவீரர்களும் இருக்கிறார்கள். அந்த மாவீரர்கள் வரிசையில் கழகத்தின் வளர்ச்சிக்காக ரத்தம் சிந்தி உழைத்தவர்கள் பலர். அவர்களில் தூத்துக்குடிப் பகுதியில் கழகத்தின் அடையாளமாக இருந்து உழைத்த ஓர் உடன்பிறப்புதான் மாவீரன் கே.வி.கே.சாமி.

*1948. **திராவிடர் கழகத்தின் 18-வது மாகாண மாநாடு தூத்துக்குடியில் 'திராவிடர் திருநாள்' போல் நடைபெற்றது.** தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஒன்றரை லட்சம் இயக்கத் தோழர்கள் தூத்துக்குடியில் கூடியிருந்தனர். அந்த மாநாடு சிறக்க தலைமையேற்றிருந்தார் தந்தை பெரியார். இரண்டு நாட்கள் கட்டுக்கோப்போடு நடைபெற்ற அந்த மாநாட்டின், பணிகள் சிறக்கவும் தாமதமின்றி நடைபெறவும் தலைமையின் கருத்துகளை உள்வாங்கிச் செயல்பட்டு வந்தார் கே.வி.கே.சாமி.*

### திராவிட நாட்டின் கவர்னர் ஜெனரல்

அதற்கான பெரும் பாராட்டாக, **'விடுதலை பெற்ற திராவிட நாட்டின் முதல் கவர்னர் ஜெனரல் பதவியை வகிக்கத் தகுதியுடைய ஓர் இளைஞரை இங்கு கண்டேன். அவர்தான் இந்த மாநாட்டின் தொண்டர் படைத் தலைவராகப் பணிபுரிந்து மாநாட்டின் வெற்றிக்குக் காரணமாகத் திகழும் தோழர் கே.வி.கே.சாமி' என்று பெரியாரின் வாழ்த்தைப் பெற்றார்.**

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த மாநாட்டில் நன்றியுரை வழங்கும் வாய்ப்பையும் கே.வி.கே.சாமி அவர்களுக்கே வழங்கிப் பெருமைப்படுத்தினார் பெரியார். இந்தப் பொறுப்பு நிறைந்த பெருமைப் பணியை இயக்கமே பாராட்டுமளவு ஏற்றுச் செய்தபோது கே.வி.கே.சாமி, வெறும் 24 வயதே நிறைவுற்ற இளைஞர்.

### தொழிலாளர்களின் தோழர்

தூத்துக்குடி நகரத்தில் 1924-ஆம் ஆண்டு மார்ச் 10-ஆம் தேதி பிறந்தார் கே.வி.கே.சாமி. அந்தக் காலகட்டத்தில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப் பரப்பு பிரச்சாரங்களால் ஈர்க்கப்பட்டு, தனது மாணவப் பருவத்திலேயே மக்கள் பணியில் தன்னை இணைத்துக்கொண்டு செயல்படத் தொடங்கினார். பெரியார் எனும் பெரும் ஆளுமையின் தலைமையை ஏற்ற லட்சக்கணக்கான கொள்கை இளைஞர்களில் ஒருவராக தூத்துக்குடிப் பகுதியில் இயக்கப் பணிகளைத் தொடர்ந்தார்.

நூற்பாலைத் தொழிலாளர்களும், உப்பளத் தொழிலாளர்களும் நிறைந்தவை தூத்துக்குடியும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும். கூலி உயர்வு உள்ளிட்ட தொழிலாளர்களின் உரிமைகளுக்கான போராட்டங்களை முன்னின்று நடத்தி, தொழிலாளர்களின் தோழனாகவும், அவர்களின் நம்பிக்கையைப் பெற்றவராகவும் திகழ்ந்தார் கே.வி.கே சாமி. தொழிலாளர் நலனுக்கான இந்தப் பணிகள் அவருக்கு, பதினைந்தாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் பொறுப்பையும் வழங்கியது.

### நெல்லை மாவட்டச் செயலாளர்

பேரறிஞர் அண்ணா 1949-ஆம் ஆண்டில் கழகத்தை உருவாக்கிய போது, அவரின் தலைமையை ஏற்று, முதல் நாள் தொடங்கி கழகப் பணியில் இணைத்துக்கொண்டு செயல்படத் தொடங்கினார் கே.வி.கே.சாமி. புதிதாக உருவாகி இருந்த கழகத்தை அமைப்பு ரீதியில் வலுப்படுத்த வேண்டிய பொறுப்பு அண்ணா முன் இருந்தது. அதற்காக, அவர் அமைப்புக் குழு ஒன்றையும் உருவாக்கினார்.

அண்ணாவின் நம்பிக்கையைப் பெற்ற அந்த அமைப்புக் குழுவில் கே.கே.நீலமேகம், என்.வி.நடராசன் ஆகியோரின் பெயர்களுடன் கே.வி.கே.சாமியின் பெயரும் இடம்பெற்றிருந்தது. கழகத்தின் எதிர்காலம் குறித்த பெரும் கனவோடு அந்த அமைப்புக் குழுவில் இணைந்து செயலாற்றினார் கே.வி.கே சாமி.

அன்றைய நெல்லை மாவட்டம் என்பது தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களை உள்ளடக்கியது. அந்த மிகப்பெரிய பகுதிக்கான மாவட்டச் செயலாளராகவும் செயல்பட்டார் கே.வி. கே.சாமி. தென் தமிழ்நாட்டில் கழகத்தின் முகங்களில் ஒருவராகவும் விளங்கினார். தூத்துக்குடி-நெல்லை-தென்காசி பகுதிகள் முழுவதும் பயணித்து கழகக்கொடி ஏற்றி, கிளைக் கழகங்களை உருவாக்கி கழகத்துக்கான அடித்தளத்தை உருவாக்கினார். அண்ணா-கலைஞர் உள்ளிட்டோரை அழைத்துக் கூட்டங்களை நடத்தி, அப்பகுதி மக்களைக் கழகத்தை நோக்கி அழைத்து வந்தார்.

> **து**டிப்பும் செயல்திறனும் மிக்க இளைஞராக விளங்கிய கே.வி.கே.சாமி நகராட்சியின் வளர்ச்சிப் பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு, நகராட்சி மன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றினார். அரசியல் பணியோடு கல்விப் பணியையும் மேற்கொண்டார், தூத்துக்குடி நகரத்தில் தனியார் பள்ளி ஒன்றையும் நடத்தி வந்தார் கே.வி.கே. சாமி.

### அண்ணா சொல்லை மீறா தம்பி

*'அண்ணா வழியில் அயராது உழைப்போம்'* என்பது கலைஞர் வழங்கிய ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்று. அண்ணா உயிரோடு இருந்தபோதே அவர் சொல் மீறாத தம்பியாக இருந்தார் சாமி. "தம்பி, நான் உங்கள் யாவரிடத்திலும், உரிமையுடன் பேசுவேன். சாமியிடம் நான் சொந்தத்துடன் பேசுவேன் - என்னை நன்றாகப் பார்த்தபடியே அவர் இருக்கமாட்டார் - நான் பேசும் போது, அவர் 'அப்படியா?' என்று கேட்டதில்லை, 'ஆகுமா?' என்று கேட்பதில்லை, ஆகட்டும் என்பதன்றி, பிறிதோர் சொல்லை அவர் எனக்கு அளித்ததில்லையே!" என்ற பேரறிஞரின் வார்த்தைகளே அதற்கான சான்று.

அண்ணா அவர்கள் கே.வி.கே.சாமியைப் பார்க்கும்போதெல்லாம் சொல்லும் அறிவுரை, "கழகத்தினர் பத்து பேரை எப்போதும் கூட வைத்திரு" என்பதுதான். என்றும் அண்ணாவின் சொல்மீறா தம்பி சாமி இதை மட்டும் கேட்க மறந்தார். 1956 செப்டம்பர் 20-ஆம் நாள் தூத்துக்குடி கழக அலுவலகத்தில் பணிகளை முடித்துவிட்டு, வீடு திரும்பும் போது இருட்டில் சூழ்ந்த பகைவர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார் மாவீரன் கே.வி. கே.சாமி. தொழிலாளர் நலனுக்காக அவர் முன்னெடுத்த போராட்டங்களும், கழகத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பணிகளுமே அவருக்குப் பகையாக அமைந்தன.

> **திருநெல்வேலிச் சீமையில் உயர்ந்து பறக்கும் கழகக் கொடியில் என்றும் வாழ்வார் கே.வி.கே.சாமி.**

### பேசப்பட்ட பெரும்பொருள்

கே.வி.கே.சாமியின் மரணத்தை, தன் வீட்டில் ஒருவரை இழந்ததைப் போல் வருந்தியது அன்றைய சென்னை மாகாணம். திராவிட இயக்க இதழ்கள் எல்லாம் கே.வி.கே. சாமிக்கான இரங்கல் செய்தியோடு வெளியாகின. தன் துயரத்தைத் **'திராவிட நாடு'** இதழில் சாமிக்கான இரங்கலாக, "எம்மிடம் பேச்சாளரும் எழுத்தாளரும் நிரம்ப இருக்கிறார்கள் - நடிகர்கட்குக் குறைவில்லை - நல்லோருக்கும் குறைவில்லை- வல்லோருக்கும் குறைவில்லை - ஆனால் நமது சாமி, நல்லவர், வல்லவர் எனும் இரு அருங்குணமும் ஓர் உருவாய் அமைந்து, பேசுவோருக்கும் எழுதுவோருக்கும் பெருந்துணையாய், பேசப்படத்தக்கப் பெரும்பொருளாக அல்லவா விளங்கிவந்தார். அழுகிறேன், அழுகிறீர்கள், அழுகிறோம்" என எழுதினார் அண்ணா.

"கழகக் கொள்கையைப் பரப்பி, கழக அமைப்பைக் கட்டிக்காத்து வந்த தீரன், தூத்துக்குடி என்றாலே சாமி" என பேராசிரியரும், "திருநெல்வேலி சீமையிலே தேடித் தேடி அலைந்தாலும் அப்படியொரு திறனுடைய தீரனைப் பெற முடியுமா என்ற ஐயம் நம் நெஞ்சை உருக்குகிறது" என கலைஞரும் இரங்கல் செய்தியை வெளியிட்டனர்.

தமிழ்நாடெங்கும் அனுதாபக் கூட்டங்கள் சாமியின் நினைவைப் போற்றி நடைபெற்றன. தலைமைக் கழகம் சார்பில், வண்ணை கல்லறைத் திடலில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தலைமையேற்று உரையாற்றினார், அன்றைய கழகப் பொதுச்செயலாளர் நாவலர்.

கலைஞர் 'நெஞ்சுக்கு நீதி'யில் "சாமி சிந்திய ரத்தம் வீண் போகவில்லை. தூத்துக்குடிக்கு எத்தனையோ வெற்றிகளைப் பெற்றுத் தந்தது. ஆனால், அந்த வெற்றிகளைக் கண்டு மகிழ, விதை போட்ட விவசாயி இல்லை" என்று எழுதினார். திருநெல்வேலிச் சீமையில் உயர்ந்து பறக்கும் கழகக் கொடியில் என்றும் வாழ்வார் கே.வி.கே.சாமி.

(துடிக்கும்...)

---

## நூலாகப் பிறக்கும் நூலகம்!



**அ**றிவை மக்கள் மையப்படுத்தும் நோக்கத்திலேயே நூலகங்கள் அமைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் நூலகம் நிறுவுவது என்பது ஓர் இயக்கமாகவே முன்னெடுக்கப்பட்டது. **'அண்ணா நூற்றாண்டு நூலக'த்தை** கலைஞர் நிறுவினார். **'கலைஞர் நூற்றாண்டு நூலக'த்தை** நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அமைத்திருக்கிறார். ஆனால், 42 ஆண்டுகளுக்கு முன்பு (1981 ஜூன் 1) இலங்கைத் தமிழர்களின் அறிவுச் சுரங்கமாக இருந்த **'யாழ் நூலகம்'** எரிக்கப்பட்டது.

சர்வாதிகாரத் தீக்கு இரையான யாழ் நூலகத்தைப் பற்றி கவிஞர் சந்தரெசி சுதுசிங்க **'தீயில் விழுந்த சிறகுகள்'** என்ற பெயரில் காவியம் ஒன்றை எழுதி இருக்கிறார். **'காலச்சுவடு'** வெளியீடாக, தமிழில் விரைவில் வெளிவரவிருக்கிறது. அறிவை எரித்த ஆட்சியாளர்களின், நூலகத்தின் அருமை தெரியாத ஆத்மாக்களின் மனசாட்சிக் கதவுகளை இந்நூல் திறக்கட்டும்.

## :ப்ளாஷ்பேக்





முத்து

### வியப்பூட்டிய எழுச்சியுரை!

**வே**லூர் மாவட்டம் ஆம்பூர் பகுதியில் உள்ள, தந்தை பெரியார் பகுத்தறிவுப் படிப்பகம் அருகில் இன்றைய முதலமைச்சரும் அன்றைய இளைஞர் அணிச் செயலாளருமான கழகத் தலைவர் அவர்கள், கழகக் கொடியேற்றி வளர்ச்சி நிதி வசூல் செய்ய வருகை புரிந்திருந்தார். 1991-ல் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் ஆற்றிய எழுச்சியுரை, எங்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தியது. அவரோடும் கழக முன்னணியினர் பலரோடும் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது.

**-ஜே. சி. முத்து,**
**நகர மன்ற உறுப்பினர்,**
**ஆம்பூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் கழகத்தோடு...

**1976-ஆம் ஆண்டு மிசா நெருக்கடி காலத்தில், மாநிலக் கட்சிகளைத் தடை செய்ய இருப்பதாக செய்திகள் பரவின. அதையடுத்து சில கட்சிகளின் பெயருக்கு முன்னால் 'அனைத்திந்திய' என்ற சொல் சேர்க்கப்பட்டது. கழகத்தின் பெயரையும் மாற்றிக் கொள்ள சில தலைவர்கள் ஆலோசனைகள் வழங்கினர். தி.மு.க. அரசியல் கட்சியல்ல, கலாச்சார கழகமாக ஆக்கலாம் என்றும் வலியுறுத்தினர். ஆனால், அவசரப்பட்டு அடிப்படையை இழந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் கலைஞர். இப்படி ஓர் எண்ணம் இருப்பது தெரிந்தால்கூட, கழகத் தொண்டர்கள் தாங்க மாட்டார்கள் என, 'வாழ்ந்தாலும் கழகத்தோடு வாழ்வோம், வீழ்ந்தாலும் கழகத்தோடு வீழ்வோம்' என நின்று காட்டினார் கலைஞர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 137




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131